# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI

| | |
|---|---|
| Case Number | CC No.57/2026 |
| Deposition of witness | PW- 5 /LW- 9 |
| Name | திருமதி. கீதா (காவல் ஆய்வாளர்) |
| Husband Name | திரு. வடிவேல் |
| Village | கும்பகோணம் |
| Taluk | கும்பகோணம் |
| Age | 37/2026 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 12th day of June 2026**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி.கு.பரமேஸ்வரி, bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

**(சாட்சியை நீதிமன்ற காவலர் திரு.வீரப்பிரகாஷ் GR-1 1990 என்பவர் அடையாளம் காட்டி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது தஞ்சை மாவட்ட தனிவிரல் ரேகை கூடத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். 08.12.2025 அன்று பணியில் இருந்தபோது மதுக்கூர் கா.நி குற்ற எண் 448/2025 ச/பி. 303(2) BNS குற்ற சம்பவ நிகழ்விடம் குறித்து எனது உயர் அதிகாரிகள் மூலம் தகவல் பெறப்பட்டு என்னுடன் பணிபுரியும் காவல் உதவி ஆய்வாளர் திருமதி. அமலா என்வருடன் குற்ற சம்பவ நிகழ்விடம் சென்று ஆய்வு செய்ததில் இரும்பு பீரோ, மரக்கதவு, எவர்சில்வர் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள், மர அலமாரி மற்றும் கலைந்து இருந்த பொருட்களை ஆய்வு செய்ததில் இரும்பு பீரோவலிருந்து மூன்று விரல்ரேகை பதிவுகள் பதிவு செய்யப்பட்டது. அதில் 2 விரல்ரேகை பதிவுகள் வீட்டில் உள்ள நபர்களுடன் ஒத்துப்போனது. மீதமுள்ள 1 விரல்ரேகை பதிவு வீட்டில் உள்ள யாருடனும் ஒத்து'போகாத காரணத்தினால் விரல் ரேகை பதிவை G1 என குறியிட்டு புகைப்படம் எடுத்து அதனை NAFIS (National Automated Fingerprint Identification System) என்ற Software ல் உள்ளீடு செய்ததில் விரல்ரேகையானது கரூர் கா.நி குற்ற எண் 1336/20 ச/பி 457,380 IPC. வழக்கில்

தொடர்புடைய செல்வகுமார் (எ) சர்க்கரை த/பெ மலைராஜா தேனி மாவட்டம் என்பவரின் இடது பெருவிரல் ரேகையுடன் ஒத்துப்போனது. இதனை அறிக்கையாக தயார் செய்து விசாரணை அதிகாரிக்கு அனுப்பி வைத்தேன். அந்த அறிக்கையில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த Scene of Crime Visiting Report மற்றும் Identification Report அ.சா.ஆ. 6 மற்றும் 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் தஞ்சை மாவட்ட தனிவிரல் ரேகை கூடத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றால் சரிதான். புகார்தாரர் வீட்டில் மூன்று விரல்ரேகை மாதிரிகள் இருந்தது என்றால் சரிதான். அந்த மூன்றுமே புகார்தாரர் வீட்டு நபர்கள் உடையதுதான் என்றாலும், எதிரிகள் கைரேகை மாதிரி இல்லை என்றாலும், நான் சரியாக பரிசோதனை செய்யாமல் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை</u>**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/- திரு.த.சுதர்சன் M.A.,L.L.B.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை